## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**MCOP. No. 28 / 2022**

**2025 ம் வருடம் மார்ச் மாதம் 12 ம் நாள் புதன்கிழமை**

**ம.சா.1 – பூமிநாதன்**

**1 வது எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி**

எனது நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் சம்பவ இடத்தில் இருந்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை வழக்கிற்காக சம்பவ இடத்தில் இருந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன நபர் எனது பெரியப்பா என்பதால் அவரது குடும்பத்திறகு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பார்க்காத விபத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. விபத்தில் இறந்து போன சபரிமலைக்கு விபத்தின் போது 75 வயதிருக்கும் என்றால் இல்லை அவருக்கு 65 வயது இருக்கும். எனது அப்பாவிற்கு 60 வயது ஆகும். இறந்துபோன சபரிமலை வயது முதிர்வால் எந்த வேலையும் பார்க்கமுடியாமல் அவரது குடும்பத்தின் பராமரிப்பில் தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. சபரிமலை விபத்து சமயத்தில் சாலையை சரியாக பார்க்காமல் திடீரென சாலையை கவனக்குறைவாக கடக்க முற்பட்டதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் மிதமான வேகத்தில் கவனமாக ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. இறந்துபோன சபரிமலையை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. நான்

சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விபத்து ஏதும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கோரும் இழப்பீட்டுத் தொகை 1ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் நான் விபத்து சமயத்தில் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் நான் தான் சபரிமலையை 108 ஆம்புலென்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்று குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் மனுதாரர்கள் எனது உறவினர்கள் என்பதால் அவர்கள் குடும்பத்திற்கு அதிக இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சபரிமலை சாலையை கடந்த போது இந்த விபத்து நடந்தது எனறால் சரிதான். பொதுவாக சாலையை கடக்கும் போது இருபுறமும் பார்த்து தான் கடக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில் பள்ளி உள்ளதால் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் மிதமான வேகத்தில் தான் வந்தது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது விபத்து நடந்து 6 வருடங்கள் ஆகிவிட்டது. விபத்தில் இறந்துபோன சபரிமலை வயது முதிர்வின் காரணமாக வேலைக்கு செல்லாமல் குடும்பத்தின் பராமரிப்பில் தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல அவர் விவசாயம் பார்த்து வந்தார். அவரை வைத்து தான் அந்த குடும்பமே வாழ்ந்து வந்தது. விவசாயம் பார்த்து வந்தார் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை

என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் இறந்துபோன சபரிமலை என்ன வேலை பார்த்து வருகிறார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை